# நியம அளவை முறைகள்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

சோ. கிருஷ்ணராஜா
மெய்யியல் துறை
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாண வளாகம்

PUBLISHED BY
SCHOOL OF ACCOUNTANCY
57, Hospital Road
Koddady
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

275

சிவசாமி

# நியம அளவை முறைகள்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

**சோ. கிருஷ்ணராஜா**
மெய்யியல் துறை
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாண வளாகம்

PUBLISHED BY
**SCHOOL OF ACCOUNTANCY**
57, Hospital Road
Koddady
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
160

# நியம அளவை முறைகள்

சோ. கிருஷ்ணராஜா

முதற்பதிப்பு : மார்ச் 1977
பதிப்புரிமை ஆசிரியருக்கே.
அச்சுப்பதிவு :
விபுலாநந்த அச்சகம்
யாழ்ப்பாணம்

Author: S. Krishnarajah
Copyright: Reserved
Publishers: The School of Accountancy, Jaffna.
First Edition: March 1977
Printers: Vipulananda Press, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியம அளவை முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அளவையியலின் ஆராய்ச்சிப் பொருள்

அளவையியல் என்பது நியாயங்கள் பற்றிய விஞ்ஞானமாகும் அது பல வகையான சான்றுகளின் ஏற்புடைமை பற்றியதாகும் பாரம்பரியமாக அளவையியலானது ஒரு முடிவினைப் பெறுவதற்கு ஆதாரமாக உள்ளனவற்றைப் பற்றிய ஆய்வு எனக் கருதப்பட்டது. எடுப்புகளுக் கிடையிலான தொடர்புகளைப் பற்றியதே அளவையியலின் ஆராய்ச்சிப் பொருளாகும். இத் தொடர்புகள் புறவயமானவை. எனவே ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எடுப்புகளில் இருந்து பிற எடுப்புகளைப் பெறும் நிபந்தனைகளைப் பற்றியதாகும். அளவையியல் எடுப்புகளது பொருளுண்மை பற்றிய ஆய்வினை இங்கு செய்வதில்லை.

**1.1 எடுகூற்றுக்களது உண்மை, பொய்மையில் அளவையியல் முடிவுகள் தங்கியிருப்பதில்லை.**

இரு பொய்யான எடுப்புகளிலிருந்து அல்லது இரு உண்மையான எடுப்புகளிலிருந்து அளவையியல் விதிகளைப் பெறுவதன் மூலம் வலிதான முடிவுகளைப் பெறலாம்.

உதாரணமாக :

(A) எல்லா மனிதரும் இறப்பர்
X ஒரு மனிதன்
ஆகவே X இறப்பான்.

இங்கு உண்மையான எடுகூற்றுக்களிலிருந்து முடிவு பெறப்பட்டது.

(B) எல்லா மனிதரும் பறப்பர்
X ஒரு மனிதன்
ஆகவே X பறப்பான்.

இங்கு பொய்யான எடுகூற்றிலிருந்து பிழையான முடிவு பெறப்பட்ட பொழுதும் அம் முடிவு வலிதானதே.

விஞ்ஞான முறையிலான நியாயம் எப்பொழுதும் உண்மையான எடுப்புகளிலிருந்தே பெறப்படும் என்பது தவறு. பொய்யானது என நிருபிக்கப்பட்ட எடுகூற்றுகள் அவ்வாறு நிறுவுவதன் மூலம் நிராகரிக்கப்படலாம். அளவையியல் அனுமானங்கள் எடுப்புகளின் பகுதிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையான எடுகூற்றுக்கள் எப்பொழுதும் பிழையான முடிவுகளையே தரும் என நினைப்பது தவறாகும்.

உதாரணமாக :

எல்லா மெக்சிக்கோவரும் ஐக்கிய அமெரிக்காவின் பிரஜைகள்.

எல்லா வேஜீனியரும் மெக்சிக்கோவர் .
ஆகவே எல்லா வேஜீனியரும் ஐக்கிய அமெரிக்காவின் பிரஜைகள்.

ஒரு எடுகூற்று பிழையானது என்பதிலிருந்து பெறப்படும் முடிவானது உண்மையானது என நிறுவப்படவில்லை எனினும் அம் முடிவு தவறானதல்ல.

தரப்படும் எடுப்புகளுக்கிடையே தொடர்பு எதுவும் இல்லாதபொழுது நாம் முடிவைப் பெறமுடியாது.

உதாரணமாக :

எல்லா மலர்களும் அழகானவை;
பெரும் தொகையான மக்கள் வருடாவருடம் புற்றுநோயினால் இறக்கின்றனர்.

அளவையியல் தொடர்பு எடுகூற்றுகளாக தரப்படும் எடுப்புகளுக்கிடையே இல்லாத போது எத்தகைய அனுமானத்தையும் பெறமுடியாது.

1.2 அளவையியல் அனுமானம் நியமப் பண்பைக் கொண்டது.

வெவ்வேறு வகையான நியாய வடிவங்களதும் அல்லது அமைப்புக்களதும் ஏற்புடைமை பற்றி அளவையியல் ஆராய்கிறது. அளவையியல் அனுமானம் நியமப் பண்புடையது என்பதன் கருத்தாவது, அது எடுப்புகளுக்கு இடையிலான எல்லா வகையான தொடர்புகளையும் பற்றி ஆராய்வதனாலே ஆகும்.

1.3 அளவையியல் அனுமானங்கள் ஏலவே நிர்ணயிக்கப்பட்டது.

எடுப்புகளுக்கிடையிலான தொடர்புகளை ஆராய்வது ஒருவகையான கண்டுபிடிப்பாகும்.தரப்பட்ட எடுப்புகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையிலான தொடர்புகள்மெய்யானதோ அல்லது அவ்வா றில்லாததோ எனத் தீர்மானிப்பது அளவையியலால் ஆகும். அதனுல் அளவையியலை வலிதான அனுமானங்கள் பற்றிய விஞ்ஞானம் என வரையறுக்கலாம்.

## 1.4 அளவையியலின் பிரயோகமும், பயன்பாடும்

உண்மையை அறிவதே அளவையியலின் நோக்கம். இது உண்மையை அறிவதால் பெறப்படும் பயன்பாடு களைப் பற்றியதல்ல. சரியான அனுமான வடிவம் உண் மையை அறியும் செயல்முறையில் ஓர் இன்றியமையாத பகுதியாகும். ஒரு எடுப்பின் உண்மை என்பது ஏலவே ஸ்தாபிகப்பட்ட விதிகளிலிருந்து பெறப்படும்.

மனித நம்பிக்கைகளை மதிப்பீடுவதில் அளவையியல் பயன்படும். அளவையியல் விதிகள் என்பன சரியான முடிவுகளைப் பெறுவதற்கான கலைத்திறன்களே. (யுக்தி முறைகள்)

## 2 எடுப்பு என்றல் என்ன?

அளவையியலில் கருத்துக்களை வெளியிடுவதற்கு பயன் படுத்துகின்ற வாக்கியங்கள் எடுப்புகள் எனப்படும். இவை சாதாரண வாக்கியங்களிலிருந்து வேறுபட்டது. சாதாரணமாக வாக்கியங்கள் கட்டளை மொழியாகவோ அல்லது உணர்ச்சி மொழியாகவோ அல்லது விபரிப்பு மொழியாகவோ அமையும். ஆனுல் இவ்வாறு அமையும். வாக்கியங்கள் எல்லாம் எடுப்புகளாக மாட்டா மொழியின் விபரிப்புப் பயன்பாட்டின் பொழுதே எடுப் புகள் பெறப்படுகின்றன. இதனுல்தான் வியப்பு. வின விருப்பம், கட்டளை. என்பனவற்றை வெளியிடுவனவாக வாக்கியங்கள் அமையலாம் என்றும் அவ்வாக்கியங்கள் எடுப்புகளாக மாடடா, என்றும் கூறப்படுகின்றது. ஒரு வாக்கியம் எடுப்பானுல் அது, எதனையாவது விரித் துரைக்க வேண்டும். இது உண்மையாக இருக்கலாம். அல்லது பொய்யாக இருக்கலாம் உண்மை என்றே அல்லது பொய்யென்றே நிச்சயமாக கூறமுடியாது. என்றுல் அது எடுப்பாகாது. உதாரணமாக நானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்யும் என்ற வாக்கியம் உண்மையென்றோ பொய்யென்றோ நிச்சயமாகக் கூறமுடியாதது ஆதலி னுல் அவ்வாக்கியம் எடுப்பாக மாட்டாது. மேலும் அவ்வாக்கியம் அதைக் கூறுபவனது விருப்பத்தை வெளியிடுவதாகவும் இருக்கலாம்.

எடுப்பு என ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விபரிப்புவாக் கியம் கருத்துடையதாக இருத்தல் வேண்டும். உண்மை யில் கருத்தற்ற வாக்கியங்கள், எதனையும் விபரிக்க மாட்டா.

உதாரணமாக: கணிதச் சமன்பாடுகள் பட்டணம் போயின என்ற வாக்கியம் எதனையும் விரித்துரைக்கா ததினுல் கருத்தற்றதாகிறது.

எடுப்புகளை அவற்றின் இயல்புக்கு ஏற்ப (1) வகுப்பு எடுப்புகள், (2) தொகுப்பு எடுப்புகள் என பாகுபடுத்த லாம். "முக்கோணம் என்பது மூன்று கோணங்களை யுடையது' என்ற எடுப்பு ஒரு வகுப்பெடுப்பாகும் எல்லா மனிதர்களும் இறப்பார்கள் என்ற எடுப்பு தொகுப் பெடுப்பாகும்.

## 2.2 எடுப்பின் வகைகள்:-

மரபுவழி ஆசிரியர்கள் தன்மை, அளவு என்பன வற்றை கவனத்தில் கொண்டு எடுப்புகளை இருவகைகளாக பாகுபடுத்துகின்றனர்.

**தன்மை நோக்கிய பாகுபாடு :-**

அ. அறுதி எடுப்பு / பதார்த்த எடுப்பு

அறுதி எடுப்புகள் தனி ஒரு பொருளை அல்லது நிகழ்ச்சியை சுட்டுவதாக அமையும் பொழுது தனிப் பொருள் எடுப்பாகும்.

உதாரணம்: சோக்கிரதர் ஒரு மனிதன்.
ஒரு வகுப்பினை அல்லது தொகுதியினை சுட்டும்பொழுது அது நிறை எடுப்பாகும்.

உதாரணம்: எல்லா மலர்களும் நறுமணம் உடை யவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. நிபந்தனை எடுப்பு

ஒரு எடுப்பில் வரும் எழுவாய், பயனிலை என்பனவற்றில் பயனிலையின் உண்மை / பொய் எழுவாயின் நிபந்தனையால் பெறப்படுமாயின் அது நிபந்தனை எடுப்பாகும்.

**உதாரணம்:** இராதா படித்தால் பரீட்சையில் சித்தி பெறுவாள். ஒரு நிபந்தனை எடுப்பில் முற்கூற்று விதிக்கப்பட்டு பிற்கூற்று விதிக்கப்படலாம். முற்கூற்று மறுக்கப்பட்டு பிற்கூற்று விதிக்கப்படலாம். முற்கூற்றும் பிற்கூற்றும் மறுக்கப்படலாம். ஆனால் முற்கூற்று விதிக்கப்பட்டு பிற்கூற்று மறுக்கப்படல் ஆகாது.

இ. உறழ்வு எடுப்பு

ஒரு எடுப்பில் இடம்பெறும் இரு நிமித்தங்களில் ஏதாவது ஒன்றுமட்டுமே உண்மையாயின் அது உறழ்வு எடுப்பாகும். இரண்டும் உண்மையாகவோ அன்றி பொய்யாகவோ இருத்தல் ஆகாது

உதாரணம்:

ஒன்றில் இராதா அழகானவள் அல்லது அழகற்றவளாக இருப்பாள்.

2·3 அளவு நோக்கிய பாகுபாடு.

எடுப்புகளை உடன்பாட்டு எடுப்புகள் என்றும் எதிர்மறை எடுப்புகள் என்றும் பிரிக்கலாம். அதேபோன்று நிறை எடுப்புகள் என்றும். குறை எடுப்புகள் என்றும் பிரிக்கலாம். நிறையும், குறையும் உடன்பாட்டு உருவத்திலும், எதிர்மறை உருவத்திலும் இணைந்துவரும். அவையாவன பின்வருமாறு.

அ. உடன்பாட்டு நிறையெடுப்பு / A வகை எடுப்பு.
கோள்கள் அனைத்தும் சூரியனை சுற்றுபவை ஆகும்.

ஆ உடன்பாட்டு குறையெடுப்பு / I வகை எடுப்பு,
சில மலர்கள் நறுமணம் உடையவை ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. எதிர்மறை நிறையெடுப்பு / E வகை எடுப்பு.
குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.


ஈ. எதிர்மறை குறையெடுப்பு / O வகை எடுப்பு
சில மலர்கள் நறுமணம் உடையவை அல்ல

முற்கூறிய நான்குவகை எடுப்புகளையும் இயூலர் என்பவரது படங்கள்மூலம் விளக்கலாம்.


A வகை எடுப்பு





E வகை எடுப்பு




I வகை எடுப்பு



O வகை எடுப்பு



## 3. சிந்தனை விதி

அ. பகுத்தறிவின் அடிப்படையில் உள்ள சில இன்றியமையாத் தத்துவங்களை குறிப்பிடுகின்றன.

ஆ. சிந்தனைக்குரிய பண்புகளை அவை குறிப்பிடுகின்றன

இ சிந்தனை விதியை மீறுவது இயலாது.

## 3.1 ஒருமைத் தத்துவம்

அ. ஒரு பொருள் எப்பொழுதும் தன்னுடன் ஒருமைப்பாடு உடையது என்பதே இதன் பொருள். இரும்பு ஒரு உலோகம் என்பது எல்லோருக்கும் எக்காலத்தும் ஒரே கருத்தையே தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. குறியீட்டு முறையில் 'A A ஆகும்' என்று குறிப்பிடுவர். இது A A மட்டும் ஆகும் என்பதல்ல.

இ. இதனால் ஒருமை விதி கூறியது கூறல் என்ற குற்றம் உடையது என விமர்சிப்பர். இவ்விமர்சனம் தவறு. A B யாக இருந்தாலும் A யாக இல்லாமலில்லை என்பதே இதன் பொருள்.

உ—ம்: ஒரு மனிதன் குழந்தை, குமரன் இளைஞன் என்ற பல மாறுதல்களை அடைகிறான். பருவங்கள் வேறுபட்டவையே என்றாலும் இவ்வேறுபாடுகளை அடைந்தவன் ஒரு மனிதனே.

ஈ. வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

## 3.2 எதிர்மறைத் தத்துவம்

அ. ஒரு பொருள் ஒரே சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிட்ட பண்பை உடையதாகவும், அற்றதாகவும் இருக்க முடியாது என இவ்விதி கூறுகிறது.

ஆ. சிந்தனையில் இசைவை எடுத்துக்காட்டுகிறது.

இ. ஒரு பொருள் A யாகவும் A அல்லாததாகவும் இருக்க முடியாது.

ஈ. A அல்லாதது, A அல்ல என்ற வெறும் எதிர்மறையை இவ்விதி குறிப்பிடவில்லை. வெறும் எதிர்மறையாயின் கூறியது கூறல் என்ற குற்றத்திற்காளாகும்.

உ. ஒரு பயனிலை ஒரே சமயத்தில், ஒரு பொருளில் ஒரே எழுவாயுடன் சேர்ந்ததாகவும் சேராததாகவும் இருக்க முடியாது என்பதே, இவ்விதி பற்றிய அரிஸ்ரோட்டலின் விளக்கம்.

உ—ம் :- மனிதன் பகுத்தறிவுள்ளவனும் பகுத்தறிவற்றவனுமாவான் — எனல் தவறு. மனிதன் பகுத்தறிவுள்ளவனும் இறப்பவனுமாவான் — எனல் தவறல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3·3 விலக்கிய நடுத்தத்துவம்

அ. இது ஏலவே கூறப்பட்ட விதிகளின் கிளைவிதியாகும்.

ஆ. A ஒன்றில் B யாகும் அல்லது B அல்லாதது ஆகும் என்பதே இவ்விதியின் சூத்திரம்.

இ. இடை இனத்தை தவிர்ப்பதற்காகவே இவ்விதி பயன் படுத்தப்படுகிறது.

உ—ம் :- காப்பாளன் காட்டுவது பச்சைக் கொடியாயிருந் தால் அவன் சிவப்புக் கொடியைக் காட்டவில்லை யென உறுதியாகக் கூறலாம்.

ஈ. மெய்ப்பொருளானது ஒன்றிற்கொன்று எதிர்த் தொடர்பால் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகள் சேர்ந்த ஒழுங்கமைப்பாகும் என்ற கருத்தை இவ்விதி விளக்கு கிறது.

### 3·4 போதிய காரண விதி

அ. ஒவ்வொரு பொருளும் அது தானுகவும், வேருக இல்லாமல் இருக்கவும் போதிய காரணத்தைக் கொண் டது என்பதை இவ்விதி எடுத்துக்காட்டுகிறது.

ஆ. லைபினிஸ் என்பவரால் சிந்தனை விதியாக எடுத்துக் காட்டப்பட்டது.

இ. இது ஒரு சிந்தனை விதியா என்பதில் ஐயங்கள் உண்டு.

### 4. வரைவிலக்கணம்

அ. பதங்களின் கருத்தை நிர்ணயிக்கின்ற அளவை முறையே வரைவிலக்கணம் ஆகும்

ஆ. பதங்களின் கருத்துக் குறிப்பை உறுதிப்படுத்துவ தும் தனித்தன்மை யுடையதாக்குவதும் வரைவிலக் கணத்தின் நோக்கம்.

இ. வரைவிலக்கிணம் வருணனை அல்ல. விபரிப்பு என்பது கற்பனை. நினைவு என்பவற்றுடன் தொடர் புடையது.

### 4.1 வரைவிலக்கண வகைகள்

அ. கட்டுமுறை வரைவிலக்கணம்
உதாரணம்: நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சமபத வரைவிலக்கணம்

உ—ம்: சப்தம் எனும் பதத்தை ஒலி எனும் பதத்தைக் கொண்டு விளக்குவது.

இ. விரித்தன் முறை வரைவிலக்கணம்

ஈ. வருமுறை வரைவிலக்கணம்

குறிப்பு: இவை யாவும் உண்மையில் வரைவிலக்கணம் எனும் பதத்திற்குத் தரப்பட்ட விளக்கங்களே ஒழிய வரைவிலக்கண வகைகள் அல்ல.

4·2 சொல்சார், பொருள்சார் வரைவிலக்கணம்

அ. ஒரு சொல்லின் கருத்தை விளக்குவது சொல்சார் வரைவிலக்கணம்.

ஆ. ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக் கூறுவது பொருள்சார் வரைவிலக்கணம்.

4.3 வரைவிலக்கண விதிகள்

அ. இலக்கணம் தரும் பதத்தின் கருத்துக் குறிப்புக்கு அதிகமாகவோ வரைவிலக்கணத்திற் கூறலாகாது

ஆ. தெளிவற்ற அல்லது அலங்கார நடையில் வரைவிலக்கணம் அமைதலாகாது.

இ. வரைவிலக்கணம் கூறியது கூறலாய் அமைதலாகாது.

ஈ. அதன் பொருள் முழுவதும் மறையாயிருந்தால் அன்றி மறை உருவத்தில் வரைவிலக்கணம் அமைதலாகாது.

4.4 வரைவிலக்கணப் போலிகள்

அ. ஒழுங்கிசையாப் பண்புகளை உட்படுத்தும் எண்ணம்

ஆ. கவர் பொருட்பாடு.

இ. சொல் அணிப் போலி.

ஈ. வரையில் கூற்றிலிருந்து அரையுடைய கொள்ளலும் அதன் மறுதலையும்.

உ. சமுதாயப் போலியும், பிரிவுப் போலியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. அளவையியற் பிரிப்பு முறை

பதத்தின் அகலக் குறிப்புப் பற்றிய வகுப்பே அளவையியல் முறைப் பிரிப்பாகும். எதனைப் பிரிக்கின்றோமோ அது பிரிமுழுமுதல் எனப்படும். பிரிப்பின்போது பெறப்படுவது பிரிபடுபகுதிகள் எனப்படும். எந்த ஒரு விடயத்தையும் விளக்கவும் விளங்கவும் பிரிப்பு முறை உதவியாயமைகிறது.

## 5.1 பிரிப்பு வகைகள்

அ. பௌதீகப் பகுப்பு :- தனியனைப் பகுதிகளாக பிரிப்பதே

ஆ. எண்ணக் கருமுறை வகுப்பீடு: தனியனின் பண்புகள் யாவற்றையும் எண்ணீடு செய்வதாகும்.

இ. சொற்பகுப்பு:- உண்மை எனும் மெய்க்கும், உடல் எனும் மெய்க்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுதல்.

## 5.2 அளவையியற் பிரிப்பு விதிகள்:

அ. ஒவ்வொரு பிரிப்பு முறையும் ஓர் அடிப்படையையே உடையதாயிருத்தல் வேண்டும்.

ஆ. கீழ் இனங்கள் யாவும் சேர்ந்து முழுவதற்கும் இணையான பிரிவை உடையதாயிருத்தல் வேண்டும்.

இ. பிரிப்பின் ஒவ்வொரு படியும் கூடியவரை முந்தியதற்குக் கிட்டியதாயிருத்தல் வேண்டும்.

## 5.3 கவர்ப்பாட்டு முறைப் பிரிப்பு

பிரிப்பின் ஒவ்வொரு படிநிலையிலும் விதிப்பதத்தையும் அதற்கிணையான மறைப்பதத்தையும் கொண்டு பிரிப்பை அமைக்கும்பொழுது அது கவர்ப்பாட்டு முறைப் பிரிப்பு எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ—ம் :

மனிதர்
- ஆசியர்
- ஆசியரல்லாதோர்
  - ஐரோப்பியர்
  - ஐரோப்பியரல்லாதோர்
    - அமெரிக்கர்
    - அமெரிக்கரல்லாதோர்
      - ஆபிரிக்கர்
      - ஆபிரிக்கரல்லாதோர்

## 6, பதம்

எடுப்பின் பகுதிகளாக உள்ளவை பதங்கள் எனப்படும். இது ஒரு எடுப்பில் வரும் ஒரு சொல்லாக இருக்கலாம் அல்லது சொற்றொகுதியாக இருக்கலாம்.

## 6.1 பதப் பிரிப்பு வகைகள்

அ. தனிப்பொருட் பதங்கள் / பொருட்பதங்கள்
ஆ. சமுதாய பதங்கள் / வியாப்த்திப் பதங்கள்
இ. கருத்துக் குறிக்கும் பதம் / கருத்து குறியாப் பதம்
ஈ. பண்புப் பதம் / பண்பிப் பதம்
உ, விதிப் பதம் / மறைப் பதம்
ஊ. தனிப்பதம் / சார்புப் பதம்

## 6·2 தனிப்பொருட் பதமும் பொதுபதமும்

ஒரு சொல் எத்தனை பொருள்களைக் குறித்தல் கூடும் என்ற அடிப்படையில் இப்பாகுபாடு அமைந்துள்ளது. தனிப்பொருட் பதம் தனி ஒரு பொருளைக் குறிக்க மட்டும் பயன்படும். பொதுப்பதம் ஒத்த தன்மையுடைய பல பொருட்களைக் குறிப்பிடப் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பொருட் பதம் 2 வகை:

அ. இடுகுறிப் பெயர் — கொழும்பு

ஆ. ஒரு தனிவிவரணப் பெயர்—இலங்கையின் முதற் பிரதமர்

பொதுப்பதம்—புத்தகம், நாய், மனிதன்

## 6·3 சமுதாயப் பதமும் வியாப்திப் பதமும்

ஒரே விதமான பொருள்களின் ஒன்றிப்பால் தனித் தன்மையடைந்த கூட்டத்தின் பெயரே சமுதாயப்பதம். உ—ம்: சேனை, மந்தை

பொதுப்பதமானது தன் இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பொருளையும் சமமாகக் குறிப்பிடும். இதற்கு பிரிவுப் பயன்பாடு உண்டு. ஒரு பதம் பிரிவுப் பயன்பாட்டில் வரும் பொழுது வியாப்திப் பதமாகிறது.

உ—ம்: கப்பற்படையின் ஒரு பகுதி புயலினுல் அழிந்து விட்டது.

## 6·4 கருத்துக் குறிக்கும் பதமும் கருத்துக் குறியாப் பதமும்

ஒரு பதம் உணர்த்தும் தன்மையே கருத்துக் குறிப்பாகும், சில பதங்கள் கருத்தைக் குறிப்பன அல்ல என மில் எடுத்துக்காட்டினுர். ஒரு விடயத்தை மட்டும் அல்லது பண்பை மட்டும் கூறுவது கருத்துக் குறிக்கும் பதம் ஆகும். பொதுப்பெயர்கள் யாவும் சில பண்புகளைக் குறிப்பிடுதற்கே பயன்படுத்தப்படுவன வாதலால் அவை கருத்து குறிக்கும் பதமாகிறது.

எதனையும் உணர்த்தாது, சுட்டிக்காட்டுவதற்கு மட்டும் பயன்படும் பதங்கள் கருத்துக் குறிப்பற்ற பதங்கள் என மில் கருதுகிறுர். இடுகுறிப் பெயரும் பண்புப் பதமும் இந்த வகையிலே கருத்து குறியாப் பதங்களாகும்

## 6.5 பண்பிப் பதமும் பண்புப் பதமும்

பண்புகொள் எழுவாய் என பண்பிப் பதத்தை வரையறுக்கலாம். ஒரு பெயர் பண்பிப் பதமா அல்லது பண்புப் பதமா என்பது அது பிரயோகிக்கப்படும் முறையிலே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ—ம்: தசரதனது பக்தி எனும்பொழுது பக்தி பண்பிப் பதமாகிறது. பக்தி நாற்குணங்களில் ஒன்று எனும் பொது பக்தி பண்புப் பதமாகிறது.

## 6.6 விதிப்பதமும் மறைப் பதமும்

ஒரு தன்மை அல்லது தன்மைகளின் சேர்க்கை குறிப்பிட்ட பொருளில் இருப்பதைக் கூறுவது விதிப் பதம் ஆகும். ஒரு பொருளுக்கு அத்தகைய தன்மை அல்லது தன்மைகள் இல்லாததைக் கூறுவது மறைப் பதமாகும்.

உ—ம்: விதிப்பதம் — நன்மை
மறைப்பதம்—நன்மையல்லாதது.

## 6.7 தனிப்பதமும் சார்புப் பதமும்

வேறு எந்தப் பதத்தையும் குறிப்பாக உணர்த்தாது நிற்பது தனிப்பதம் உ-ம் புத்தகம், நூல், அழகி. வேறு ஓர் பதத்தை குறிப்பாக உணர்த்தி நிற்பது சார்புப் பதம். உ—ம் நண்பன், தாய், காதலி.

## 7. உடன் அனுமானம்

ஒரு தனி எடுப்பின் உட்கிடைகளை வெளிப்படுத்தும் நெறியாகும். இது இரண்டு வகைப்படும்.

அ. எடுப்பு முரண்பாடு
ஆ. வெளிப்பேறு

## 7.1 எடுப்பு முரண்பாடு

ஒரு எடுப்பின் உண்மை அல்லது பொய்மையிலிருந்து, அதே எழுவாயையும் பயனிலையையும் கொண்ட பிற எடுப்புக்களின் உண்மை அல்லது பொய்மையை அனுமானிக்கும் முறையாகும்.

## 7.2 வெளிப்பேறு

உண்மையெனத் தரப்பட்ட ஓர் எடுப்பிலிருந்து அதனால் உணர்த்தப்படும் பிற எடுப்புகளைப் பெறும் முறை வெளிப்பேறு எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. எடுப்பு முரண்பாடு

ஒரே எழுவாயையும் பயனிலையையும் கொண்ட இரு எடுப்புகளிடையே நிலவும் தொடர்பு முரண்பாடு எனப்படும். எடுப்புகள் நிறையாகவும் குறையாகவும் விதியாகவும், மறையாகவும் உள்ளனவாதலால் அவற்றிற் கிடையே காணப்படும் தொடர்பை பின்வருமாறு அமைக் கலாம்.

அ. A யும் I யும்; E யும் O வும்
ஆ. A யும் O வும்; E யும் I யும்
இ. A யும் E யும்
ஈ. I யும் O வும்.

இவை முறையே (அ) வழிப்பேறு, (ஆ) எதிர்மறை (இ) மறுதலை (ஈ) உபமறுதலை என நான்கு வகையான முரண்பாடுகளைத் தருகிறது.

### 8.1 வழிப் பெறுகை

நிறை எடுப்புக்கும் அதே பண்புடைய குறை எடுப் புக்கும் இடையே வழிப்பெற்று முரண்பாடு காணப் படும்.

### 8.2 எதிர்மறை

எடுப்புகள் அளவு. பண்பு என்பவற்றுல் வேறுபடும் பொழுது அவை ஒன்றிற்கொன்று எதிர்மறையாகிறது.

### 8.3 மறுதலை


முரண்பட்ட பண்புகளை உடைய நிறை எடுப்புகளி டையே மறுதலையான முரண்பாடு காணப்படும்.

### 8.4 உபமறுதலை

குறை எடுப்புகள் ஒன்றிற்கொன்று உபமறுதலை யாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5 முரண்பாட்டுச் சதுரம்




## 8.6 முரண்பாட்டு முறைமூலம் பெறக்கூடிய அனுமானங்கள்

| தரவு | A | E | I | O |
|---|---|---|---|---|
| A மெய்யானல் | T | F | T | F |
| A பொய்யானல் | F | D | D | T |
| E மெய்யானல் | F | T | F | T |
| E பொய்யானல் | D | P | T | D |
| J மெய்யானல் | D | F | T | D |
| I பொய்யானல் | F | T | F | T |
| O மெய்யானல் | F | D | D | T |
| O பொய்யானல் | T | F | T | F |

T = உண்மை

F = பொய்

D = ஐயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. வெளிப் பேறு

இது உடன் அனுமானத்தின் ஒரு வகை ஆகும். தரப்பட்ட எடுப்பு ஒன்றிலிருந்து அந்த எழுவாயையும் பயனிலையையும் கொண்ட எடுப்புக்களை அனுமானித்தல், வெளிப்பேறு ஆகும். இது எதிர்மாற்றம், மறுமாற்றம், என 2 வகைப்படும் ஏனைய வகைகளான வெளிப்பேறுகள் பின்வருமாறு:

அ. மறுமாற்ற எதிர்மாற்றம்

ஆ. எதிர்வைக்கை

இ. மறுமாற்ற எதிர்வைக்கை

ஈ. நேர் மாற்றம்

## 9.1 எதிர் மாற்றம்

தரப்பட்ட எடுப்பு ஒன்றினது எழுவாயையும், பயனிலையையும் இடமாற்றம் செய்வதே எதிர்மாற்றம் ஆகும்.

### எதிர்மாற்ற விதிகள்

அ. எடுப்பின் தன்மையை மாற்றுதல் கூடாது

ஆ. எடுகூற்றில் வியாப்தி அடையாத பதம் எதிர்மாற்றத்தின் பொழுது வியாப்தி அடைதல் கூடாது

A, E, I, வகை எடுப்புக்களே எதிர்மாற்றத்தைப் பெறும். O வகை எடுப்புக்களை எதிர்மாற்றம் செய்தல் இயலாது. எதிர்மாற்றத்தின் பொழுது எடுப்பின் அளவு மாறலாம்.

## 9.2 மறு மாற்றம்

எடுப்பின் கருத்தினை மாற்றுது எழுவாய்க்கும், பயனிலைக்கும் இடையிலான தொடர்பை மாற்றுவதன்மூலம் மறுமாற்றம் செய்யப்படும். மறுமாற்றத்தின் பொழுது எடுப்பின் அளவில் மாற்றம் செய்தல் கூடாது.

### மறுமாற்றத்திற்கான விதிகள்

அ. எடுப்பின் தன்மையை மாற்றுதல் (உடன்பாட்டு எடுப்பை எதிர்மறை எடுப்பாகவும் எதிர்மறை எடுப்பை உடன்பாட்டு எதிர்ப்பாகவும்) மாற்றுதல் வேண்டும்

ஆ. தரவின் பயனிலைக்குப் பதிலாக பயனிலையின் முரண்பதத்தை இடல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3 மறுமாற்ற எதிர்மாற்றம்

தரப்பட்ட எடுப்பை முதலில் எதிர்மாற்றம் செய்தல் வேண்டும். பின்பு அதனை மறுமாற்றம் செய்தல் வேண்டும். இதன்மூலம் பெறப்படுவது மறுமாற்ற எதிர் மாற்றம் ஆகும்.

எதிர்மாற்றம்:-

உதாரணங்கள்

எதிர்மாற்ற உரு:- A கோள்கள் அனைத்தும் சூரியனை சுற்றுபவை ஆகும்.

எதிர்மாற்றம்:- I சூரியனை சுற்றுவனவற்றுள் சில கோள்கள் ஆகும்.

எதிர்மாற்ற உரு:- I சில பெண்கள் அழகானவர் ஆவர்.

எதிர்மாற்றம்:- I அழகானவர்களுள் சிலர் பெண்கள் ஆவர்

எதிர்மாற்ற உரு:- E குதிரைகள் எவையும் கொம்புடையன அல்ல,

எதிர்மாற்றம்:- E கொம்புடையன எவையும் குதிரைகள் அல்ல.

எதிர்மாற்ற உரு:- O சில மலர்கள் நறுமணம் உடையவை அல்ல

(இவ் எடுப்பின் பயநிலையை எதிர் மாற்றத்தின் பொழுது எழுவாய்ப் பதமாக மாற்றினுல் எதிர்மாற்ற விதியான தரவில் வியாப்தி அடைந்த பதம் மாற்றத்திஞல் வியாப்தி அடையாமல் போகும் என்ற குற்றத்திற்கு ஆளாகும்.

மறுமாற்றம்

மறுமாற்ற உரு:- A எல்லா மனிதரும் இறப்பவர் ஆவர்.

மறுமாற்றம்:- E மனிதர் எவரும் இறவாதவர் அல்ல.

மறுமாற்ற உரு:- E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

மறுமாற்றம்:- A குதிரைகள் எல்லாம் கொம்பில்லாதவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமாற்ற உரு:- I சில மலர்கள் அழகானவை ஆகும்.
மறுமாற்றம்:- O சில மலர்கள் அழகற்றவை அல்ல.
மறுமாற்ற உரு:- O சில மனிதர் படித்தவர் அல்ல.
மறுமாற்றம்:- I சில மனிதர் படியாதவர் ஆவர்.

9.4 மறுமாற்ற எதிர்மாற்றம்

கொடுக்கப்பட்ட தரவை எதிர் மாற்றம் செய்து மறு மாற்றம் செய்தல் வேண்டும். மேலே தரப்பட்ட எதிர் மாற்றத்திற்கான உதாரணங்களை மறுமாற்ற எதிர் மாற்றம் செய்து பழகிக் கொள்ளவும்.

9.5 எதிர்வைக்கை

தரப்பட்ட எடுப்பின் பயனிலையின் மறையை எழுவாயாகக் கொண்ட ஓர் எடுப்பை தரவிலிருந்து அனுமானிப்பதே எதிர்வைக்கை ஆகும். இதனைப் பெறுவதற்கு தரப்பட்ட எடுப்பை முதலில் மறுமாற்றம் செய்தல் வேண்டும். பின்னர் அதையே எதிர்மாற்றம் செய்தல் வேண்டும்.

9.6 மறுமாற்ற எதிர்வைக்கை

எதிர்வைக்கையாக பெறப்பட்ட எடுப்பை மறுமாற்றம் செய்தால் வருவது மறுமாற்ற எதிர்வைக்கை ஆகும்.

உதாரணங்கள் :

மூலஎடுப்பு : A கோள்கள் அனைத்தும் சூரியனைச் சுற்றுபவை ஆகும்.

(மறுமாற்றம்) E கோள்கள் எவையும் சூரியனைச் சுற்று
(எதிர்வைக்கை) தவை அல்ல.

எதிர்மாற்றம்) E சூரியனை சுற்றுதவை எவையும் கோள்கள் அல்ல.

மறுமாற்றஎதிர்வைக்கை A சூரியனை சுற்றுதவை அனைத்தும் கோள்கள் அற்றவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஎடுப்பு: E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.
(மறுமாற்றம்) E குதிரைகள் எவையும் கொம்பில்லாதன ஆகும்.

எதிர் வைக்கை I சில கொம்பில்லாத பிராணிகள்
(எதிர்மாற்றம்) குதிரைகள் ஆகும்.

மறுமாற்ற எதிர்வைக்கை O சில கொம்பில்லாதன பிராணிகள் குதிரைகள் அல்லாதவை அல்ல.
(I வகை எடுப்புக்களை மறுமாற்றம் செய்தால் O வகை எடுப்புக்களாக மாறும். O வகை எடுப்புக்களை எதிர்மாற்றம் செய்ய முடியாது. எனவே I வகை எடுப்புக்கு எதிர்வைக்கையும், மறுமாற்ற எதிர் வைக்கையும் இல்லை.)

மூல எடுப்பு O சில அன்னங்கள் வெண்ணிறமானவை அல்ல.
மறுமாற்றம் I சில அன்னங்கள் வெண்ணிறமற்றவை ஆகும்.
எதிர்வைக்கை I சில வெண்ணிறமற்ற பறவைகள் அன்னங்கள் ஆகும்.
மறுமாற்ற எதிர்வைக்கை O சில வெண்ணிறமற்ற பறவைகள் அன்னங்களல்லாதவை அல்ல.

## 9.7 நேர்மாற்றம்

மூல எடுப்பின் எழுவாயின் மறையை எழுவாயாகக் கொண்ட எடுப்பு ஒன்றினை மூல எடுப்பிலிருந்து அனுமானித்தலே நேர்மாற்றம் எனப்படும்.

A வகை எடுப்பை நேர்மாற்றம் செய்வதற்கு அதனை முதலில் மறுமாற்றம் செய்தல் வேண்டும். பின்னர் எதிர்மாற்றம் செய்தல் வேண்டும். இதனை மாறிமாறி செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E வகை எடுப்பை நேர்மாற்றம் செய்வதாயின் முத லில் எதிர்மாற்றத்தை செய்து பின்னர் மறுமாற்றத்தைச் செய்தல் வேண்டும். இதனை மாறி மாறி செய்க.

மூலஎடுப்பு A கோள்கள் அனைத்தும் சூரியனை சுற்றும் பொருட்கள் ஆகும்.

மறுமாற்றம் E கோள்கள் எவையும் சூரியனைச் சுற்றுப் பொருட்கள் அல்ல.

எதிர் மாற்றம் E சூரியனை சுற்றாத பொருட்கள் எவை யும் கோள்கள் அல்ல.

மறுமாற்றம் A சூரியனை சுற்றாத பொருட்கள் அனைத் தும் கோள்கள் அல்லாதவை ஆகும்

எதிர்மாற்றம் I கோள்கள் அல்லாதவை சில சூரியனைச் சுற்றாத பொருட்கள் ஆகும்.

நேர் மாற்றம் O கோள்கள் அல்லாதவை சில சூரியனைச் சுற்றும் பொருட்கள் அல்ல.

மூலஎடுப்பு E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல

எதிர்மாற்றம் E கொம்புடையவை எவையும் குதிரை கள் அல்ல.

மறுமாற்றம் A கொம்புடையவை அனைத்தும் குதிரை கள் அல்லாதவை ஆகும்.

எதிர் மாற்றம் I குதிரைகள் அல்லாத சில கொம்புடை யவை ஆகும்.

நேர்மாற்றம் O குதிரைகள் அல்லாத சில கொம்பில்லா தவை அல்ல.

## 10. நியாயத் தொடை

### வரைவிலக்கணம்

இரு எடுகூற்றுக்களிலிருந்து முடிவு ஒன்றினைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற வாதமுறை நியா யத்தொடை ஆகும். நியாயத் தொடையானது எப் பொழுதும் அறுதி எடுப்புக்களைக் கொண்டே அமைக்கப் படவேண்டும் என்பதில்லை. ஏனைய வகை எடுப்புகளைக் கொண்டும் அமைக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அறுதி நியாயத்தொடை மூன்று பதார்த்த எடுப்புகளைக் கொண்டதாகவும், மூன்று பதங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

உதாரணம்

X என்பவன் Y இலும் பார்க்க உயரமானவன்.
Y என்பவன் Z இலும் பார்க்க உயரமானவன்.
ஆகவே X என்பவனிலும்பார்க்க Z உயரமானவன்.

இவ் வாதம் வலிதானது. நான்கு பதங்களை ஒருவாதம் கொண்டதாயின் அது நியாயத்தொடை அல்ல

சினிமா நடிகையர் அனைவரும் அழகானவர்கள்
சுஜாதா ஒரு சினிமா நடிகை.
ஆகவே சுஜாதா அழகானவள்

இந்த நியாயத் தொடையில் சினிமா நடிகையர், அழகானவர்கள், சுஜாதா என மூன்று பதங்கள் இடம் பெற்றுள்ளது. முடிவின் பயனிலையாக வந்துள்ள பதமான அழகானவள் என்பது பெரும் பதமாகும். முடிவின் எழுவாயாக வந்துள்ள சுஜாதா எனும் பதம் சிறு பதமாகும். பெரும் பதம இடம்பெற்றுள்ள எடுகூற்று பேரெடுகூற்று என்றும், சிறு பதம் இடம்பெற்றுள்ள கூற்று சிற்றெடுகூற்று என்றும், எடுகூற்றுகளில் மட்டும் இடம்பெற்று முடிவில் இடம் பெருத பதம் நடுப்பதம் என்றும் அழைக்கப்படும்.

10. 1 நியாயத்தொடையின் விதிகளும் போலிகளும்

அமைப்புப்பற்றிய விதி: ஒரு வலிதான நியாயத்தொடையில் மூன்று பதங்கள் மட்டுமே இடம்பெறல் வேண்டும். அவை ஒவ்வொன்றும் ஒன்றிற்கு மேற்பட்ட கருத்துக்களில் இடம் பெறல் ஆகாது.

இவ்விதியை மீறுவதால் நாற்பதப் போலியும், பொருட் போலியும் ஏற்படும்

நாற்பதப்போலி

தளபதி படையை ஆளுகிருன்
தளபதியின் மனைவி தளபதியை ஆளுகிருள்
ஆகவே தளபதியின் மனைவி படையை ஆளுகிருள்,

இங்கு தளபதி, தளபதியின் மனைவி, படை, ஆளுதல் என நான்கு பதங்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்போலி

கொடி வாள் ஏந்திய சிங்கத்தைக் கொண்டது.
மல்லிகை ஒரு கொடி
ஆகவே மல்லிகை வாள் ஏந்திய சிங்கத்தைக் கொண் [டது.

இங்கு நடுப்பதம் பேரெடுகூற்றில் ஒரு நாட்டின் கொடியையும், சிற்றெடுகூற்றில் தாவரத்தையும் குறிப்பிடுகிறது. இது பொருட் போலியாகும்

## 10.2 அளவுபற்றிய விதிகள்

எடுகூற்றுக்கள் ஒன்றிலேனும் நடுப்பதம் வியாப்தி அடைந்திருத்தல் வேண்டும். இவ்விதியை மீறும்பொழுது வியாப்தியடையா நடுப்பதப் போலி ஏற்படும்.

வியாப்தியடையா நடுப்பதப் போலி

யானைகள் யாவும் பாலூட்டிகள்
முயல்கள் யாவும் பாலூட்டிகள்
ஆகவே முயல்கள் யாவும யானைகள் ஆகும்

இங்கு நடுப்பதமானது பேரெடுகூற்றிலும் சிற்றெடுகூற்றிலும் வியாப்தி அடையவில்லை.

எடுகூற்றுகளில் வியாப்தி அடையாப் பதம் முடிவில் வியாப்தி அடைதல் கூடாது இவ்விதியை மீறுவதால் ஒழுங்கற்ற பதப்போலி ஏற்படும். இது ஒழுங்கற்ற பெரும் பதப்போலி, ஒழுங்கற்ற சிறுபதப் போலி என இருவகைப் படும்.

ஒழுங்கற்ற பெரும்பதப் போலி

கிளிகள் அனைத்தும் பறவைகள் ஆகும்.
குயில்கள் எவையும் கிளிகள் அல்ல.
ஆகவே குயில்கள் எவையும் பறவைகள் அல்ல.

பறவைகள் என்ற பெரும்பதம் எடுகூற்றில் வியாப்தியடையாமல் முடிவில் வியாப்தியடைந்துள்ளது.

ஒழுங்கற்ற சிறுபதப் போலி

காகங்கள் அனைத்தும் கரைவன
காகங்கள் அனைத்தும் பறவைகள்.
பறவைகள் அனைத்தும் கரைவன.

பறவைகள் என்ற பதம் சிற்றெடுகூற்றில் வியாப்தியடையாமல் முடிவில் வியாப்தியடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.3 தன்மை பற்றிய விதிகள்

இரு எதிர்மறை எடுகூற்றுகளிலிருந்து ஏற்புடைய முடிவு கிடையாது. இவ்விதியை மீறினால் இரு எதிர் மறை எடுகூற்றுப் போலி ஏற்படும்.

இரு எதிர்மறை எடுகூற்றுப் போலிக்கான உதாரணம்

காகங்கள் பாலூட்டி அல்ல
கிளிகள் பாலூட்டி அல்ல
ஆகவே கிளிகள் பாலூட்டிகள் ஆகும்.

எடுகூற்றுகளில் ஒன்று எதிர்மறையானால் முடிவும் எதிர்மறையாகும்

உதாரணம்: மனிதர்கள் எவரும் முழுமையடைந்தவர்கள் [அல்ல.

X ஒரு மனிதன்
ஆகவே X ஒரு முழுமை அடைந்தவன் அல்ல.

## 10.4 கிளை விதி

எடுகூற்றுகளில் ஒன்றாயினும் விதியுரையாக இருத்தல் வேண்டும்.

## 10.5 நியாயத் தொடையின் தேற்றங்கள்:-

அ இரு குறையெடுப்புகளிலிருந்து எவ்வகை முடிவை யும் பெற முடியாது

ஆ. எடுகூற்றுகளில் ஒன்று குறையானால் முடிவும் குறையாகும்

இ. பேரெடு கூற்று உடன்பாட்டுக் குறையாகவும், சிற் றெடு கூற்று எதிர்மறை நிறையெடுப்பாகவும் இருந் தால் அவற்றிலிருந்து எந்த முடிவையும் அனுமா னிக்க முடியாது.

ஈ. முடிவில் வியாப்தி அடைந்துள்ள பதங்களின் எண் ணிக்கை எடுகூற்றுகளில் வியாப்தி அடைந்துள்ள பதங்களிலும் பார்க்க குறைவாக இருக்கும்.

## 11. நியாயத் தொடை உருக்களும் பிரகாரங்களும்

### 11.1 முதலாம் உரு:

| | |
|---|---|
| ம — ப | மனிதர்கள் எவரும் முழுமையடைந்தவர் [அல்லர் |
| எ — ம | கந்தன் ஒரு மனிதன் |
| எ — ப | ஆகவே கந்தன் முழுமையடைந்தவன் அல்லன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதிகள்:**

அ. சிற்றெடுகூற்று உடன்பாடாக இருத்தல்வேண்டும்,
ஆ. பேரெடுகூற்று நிறைஎடுப்பாக இருத்தல் வேண்டும்.

**பிரகாரங்கள்:**

| அ. | ஆ. | இ. | ஈ. |
|---|---|---|---|
| A | E | A | E |
| A | A | I | I |
| A | E | I | O |

வலிமையான பிரகாரங்கள் :

| பாபற | | |
|---|---|---|
| | A | எல்லா மனிதரும் இறப்பர் எனின் |
| | A | கந்தன் ஒரு மனிதன் ஆயின் |
| | A | கந்தன் இறப்பான். |

| கீலேறென்ற்: | | |
|---|---|---|
| | E | வருமான நோக்கமுடைய வரிகள் யாவும் பாதுகாப்பு வரிகள் அல்ல |
| | A | இலங்கையின் வரிகள் வருமான நோக்கமுடையவை. |
| | E | ஆதலால் இலங்கையின் வரிகள் பாதுகாப்பு வரிகள் அல்ல |

## 11.1 இரண்டாம் உரு

| | |
|---|---|
| ப — ம | நீதிபதிகள் அனைவரும் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள் ஆவர் |
| எ — ப | சிலமனிதர் வழக்கறிஞர்கள் அல்ல |
| எ — ம | ஆதலால் சில மனிதர்கள் நீதிபதிகள் அல்லர் |

**விதிகள்**

அ. எடுகூற்றுக்களில் ஒன்று எதிர்மறையாக இருக்க வேண்டும். அதனால் முடிவும் எதிர்மறையாகும்
ஆ. பேரெடுகூற்று நிறை எடுப்பாக இருக்க வேண்டும்.

**பிரகாரங்கள்**

| அ. | ஆ. | இ. | ஈ. |
|---|---|---|---|
| E | A | E | A |
| A | E | I | O |
| E | E | O | O |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையான பிரகாரம்

பரோகொ

| | |
|---|---|
| A | உண்மையில் ஒழுக்கமான காரியங்கள் எல்லாம் [ நன்னோக்குடையவை. |
| O | சிலருக்கு நன்மையாய் முடியும் சில காரியங்கள் [ நன்னோக்கத்தோடு செய்யப்படுவதில்லை. |
| O | ∴ சிலருக்கு நன்மையாய் முடியும் சில காரியங்கள் உண்மையில் ஒழுக்கமான காரியங்கள் அல்ல. |

11·3 மூன்றும் உரு

| | |
|---|---|
| ம — ப | சில ஆசிரியர்கள் பட்டதாரிகள் அல்லர் |
| ம — எ | ஆசிரியர்கள் அனைவரும் படித்தவர்கள் ஆவர் |
| எ — ப | ∴ படித்தவர் சிலர் பட்டதாரிகள் அல்லர். |

விதிகள்

அ. சிற்றெடுகூற்று உடன்பாடாக இருக்கவேண்டும்.
ஆ. முடிவுரை குறைஎடுப்பாக இருக்க வேண்டும்.

பிரகாரங்கள்

| அ. | ஆ. | இ | ஈ. | உ. | ஊ. |
|---|---|---|---|---|---|
| A | I | A | E | O | E |
| A | A | I | A | A | I |
| I | I | I | O | O | O |

வலிமையான பிரகாரம்

போகாடோ

| | |
|---|---|
| O | சில ஆசிரியர்கள் பட்டதாரிகள் அல்ல |
| A | ஆசிரியர்கள் அனைவரும் படித்தவர்கள் ஆவர் |
| O | ∴ படித்தவர்கள் சிலர் பட்டதாரிகள் அல்லர். |

11 4 நான்காம் உரு

| | |
|---|---|
| ப — ம | எல்லாப் பெண்களும் அழகியர் |
| ம — எ | அழகானவை எல்லாம் கவர்ச்சியானவை |
| எ — ம | ∴ கவர்ச்சியானவற்றுட் சில பெண்களாகும் |

விதிகள்

அ. எடுகூற்றுகளில் ஒன்று எதிர்மறையானால் பேரெடு கூற்று நிறை எடுப்பாக இருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பேரெடுகூற்று உடன்பாடாக இருந்தால் சிற்றெடு கூற்று நிறை எடுப்பாக இருத்தல் வேண்டும்.

3. சிற்றெடுகூற்று உடன்பாடானுல் முடிவு குறை எடுப்பாக இருத்தல் வேண்டும்.

பிரகாரங்கள்

| அ. | ஆ, | இ. | ஈ. | உ. |
|---|---|---|---|---|
| A | A | I | E | E |
| A | E | A | A | I |
| I | E | I | O | O |

வலிமையான பிரகாரம்

பிறேமான்றிப்

| | |
|---|---|
| A | எல்லா நடிகையரும் அழகியர் |
| A | அழகானவை எல்லாம் கவர்ச்சியானவை |
| I | ∴ கவர்ச்சியானவற்றுட் சில நடிகையர் ஆவர். |

## 12. நிபந்தனை நியாயத்தொடை

நிபந்தனை நியாயத் தொடை இரண்டு வகைப்படும்.

அ. தூய நிபந்தனை நியாயத்தொடை

ஆ. கலப்பு நியாயத்தொடை

அ தூய நிபந்தனை நியாயத்தொடை

உட்பத்தி பெருகினுல் விலை குறையும்
விலை குறைந்தால் கேள்வி அதிகரிக்கும்
∴ உட்பத்தி பெருகினுல் கேள்வி அதிகரிக்கும்

ஆ. கலப்பு நியாயத்தொடை

மழை பெய்தால் தெரு ஈரமாகும்
மழை பெய்தது
∴ தெரு ஈரமாக இருக்கிறது.

## 12. 1 நிபந்தனை நியாயத் தொடையின் விதி

முன்னடையை விதியுரை செய்வது பின்னடையை விதியுரை செய்வதாகும்; பின்னடையை மறுப்பது முன்னடையை மறுப்பதாகும்.

இதில் முதலாவது உடன்பாட்டு ஆகாரி எனப்படும். இரண்டாவது மறுப்பாகாரி எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. உடன்பாட்டு ஆகாரி

மனிதர் நஞ்சு உண்டால் இறப்பர்
இவள் நஞ்சு உண்டாள்
∴ இவள் இறந்தாள்.

ஆ. உடன்பாட்டு ஆகாரிப் போலி

மனிதர் நஞ்சு உண்டால் இறப்பர்
இவள் நஞ்சு உண்ணவில்லை
∴ இவள் இறக்கவில்லை

நஞ்சு உண்ணவில்லை என்பதிலிருந்து இறக்கவில்லை என்பது பெறப்படாது. நஞ்சு உண்ணாது இயற்கையாக இறந்திருக்கலாம். அல்லது வேறு காரணங்களால் இறந்திருக்கலாம்.

இ. மறுப்பு ஆகாரி

மனிதர் நஞ்சு உண்டால் இறப்பர்
இவள் இறக்கவில்லை
∴ இவள் நஞ்சு உண்ணவில்லை;

ஈ. மறுப்பு ஆகாரிப் போலி

மனிதர் நஞ்சு உண்டால் இறப்பர்
இவன் இறந்தான்
∴ இவன் நஞ்சு உண்டான்.

இறப்பு என்பது நஞ்சினால் மட்டும் உண்டாவதில்லை.

13. உறழ்வு நியாயத் தொடை

ஒரு நியாயத்தொடையின் பேரெடு கூற்று உறழ்வு எடுப்பாயின் அது உறழ்வு நியாயத்தொடை எனப்படும்.

உறழ்வு நியாயத் தொடை

ஒரு கோடு நேரானது அல்லது வளைவானது
அந்தக் கோடு நேரானது ஆகும்.
∴ அந்தக் கோடு வளைவானது அன்று.

13·1 உறழ்வு நியாயத் தொடைப் போலிகள்

அ. தழுவுநிலை உறழ்வுப் போலி
ஆ தவிர்ப்புநிலை உறழ்வுப் போலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவுநிலை உறழ்வுப் போலி

வெற்றி பெறும் மாணவன் உழைப்பாளி அல்லது [புத்திசாலி
அவன் உழைப்பாளி ஆவன்.
∴ அவன் புத்திசாலி அல்லன்.

இதில் உழைப்பாளி, புத்திசாலி என்ற உறழ்வுநிலைகள் முரண்பாடுடையதல்ல வெற்றி பெறும் மாணவன் ஒருவன் புத்திசாலியாகவும் உழைப்பாளியாகவும் இருக்கலாம்.

தவிப்புநிலை உறழ்வுப் போலி

பறவைகள் ஒன்று கருப்பு அல்லது சிவப்பு
இப்பறவை கறுப்பு அன்று
∴ இது சிவப்பு ஆகும்

கறுப்பு அல்லாதது சிவப்பாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. வேறு நிறமாகவும் இருக்கலாம்.

## 14. இருதலைக் கோள்

பேரெடு கூற்று கூட்டு நிபந்தனையாகவும், சிற்றெடுகூற்று உறழ்வு எடுப்பாகவும் அமையும் நியாயத் தொடைகள் இருதலைக்கோள் எனப்படும்.

## 14.1 இருதலைக் கோள் வகைகள்

அ. எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்
ஆ எளிய அழிவிருதலைக் கோள்
இ. சிக்கலான ஆக்கப்பாட்டு இருதலைக் கோள்
ஈ. சிக்கலான அழிவிருதலைக் கோள்.

எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்

மனிதர் மணம் புரிவதால் துன்புறுகின்றனர்;
மணம்புரியாவிட்டாலும் துன்புறுகின்றனர்.
ஒன்றில் நான் மணம் புரிவேன் அல்லது மாட்டேன்
∴ எவ்வகைலும் நான் துன்புறுவது நிச்சயம்.

எளிய அழிவிருதலைக்கோள் உதாரணம்

நான் இந்த வீட்டில் குடியிருக்க வேண்டுமானால் அதற்கு வாடகை கொடுக்கவும் வேண்டும்; வீட்டுச் சாமான்களை வாங்கவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒன்றில் வாடகை கொடுக்க முடியாது அல்லது வீட்டு சாமான்களை வாங்க முடியாது

∴ நான் எப்படியாயினும் இவ்வீட்டில் குடியிருக்க முடியாது

**சிக்கல் ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்**

புத்தகங்கள் குரானின் தத்துவத்திற்கு இணங்கியவை யானல் அவை தேவையற்றவை; குரானிலிருந்து மாறுபட்டிருந்தால் அவை அழிக்கப்பட வேண்டியவை.

புத்தகங்கள் ஒன்றில் குரானின் தத்துவத்திற்கு இணங்கியிருக்கும் அல்லது மாறுபட்டிருக்கும்

∴ புத்தகங்கள் ஒன்றில் தேவையற்றவை அல்லது அழிக்கப்பட வேண்டியவை.

**சிக்கலான அழிவிருதலைக்கோள்**

நீ கருணையுள்ளவனென்றால் எல்லோரையும் ஆதரிப்பாய்; நீ நாட்டுப் பற்றுடையவனென்றால் தேசத் துரோகிகளை ஆதரிக்க மாட்டாய்.

நீ ஒன்றில் எல்லோரையும் ஆதரிக்க மாட்டாய் அல்லது தேசதுரோகிகளை ஆதரிப்பாய்.

∴ நீ ஒன்றில் கருணையுள்ளவன் அல்லன், அல்லது நாட்டுப் பற்றுடையவன் அல்லன்.

**பகுப்பளவைப்போலி**

- விளக்கப் போலி
  1. ஒழுங்கற்ற முறை
  2. ஒழுங்கற்ற மாற்றம்
  3. இலக்கண இரட்டுறு மொழி
  4. உச்சரிப்பு போலி
- அனுமானமுறைப் போலி
  - அமைப்புப் போலி
    1. நாற்பதப் போலி
    2. வியாத்தியடையாநடுப்பதப்போலி
    3. பெரும்பதப் போலி
    4. சிறுபதப் போலி
    5. இரு எதிர்மறைப் போலி
    6. இரு குறைஎடுப்புப் போலி
    7. உடன்பாட்டு ஆகாரிப் போலி
    8. மறுப்பாகாரிப் போலி
    9. தழுவுகிலேஉறழ்வுப்போலி
    10. தவிப்பு கிலே உறழ்வுப் போலி
  - பொருட்போலி
    1. இருபொருட்போலி
    2. முடிவுகோடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இந்திய நியாயத்தொடை அனுமானம்

இது இரு வகைப்படும்

அ. தன் பொருட்டனுமானம்.

ஆ. பிறர் பொருட்டனுமானம்

இவ் விருவகை அனுமானமும் உடன்பாடு, எதிர்மறை என இரு பிரிவாக கொள்ளப்படும்.

16·1 நியாயத் தொடை உறுப்புகள்

அ. பிரதிஞ்ஞை

ஆ. ஏது

இ. திருட்டாந்தம்

ஈ. உபநயம்

உ. நிகமனம்

16·2 உடன்பாட்டு அனுமானம்

பிரதிஞ்ஞை — இம்மலை நெருப்புடையது.
ஏது — புகையுடைமையால்
திருட்டாந்தம் — யாது யாது புகையுடையது
அது வது நெருப்புடையது
சமையலறை போல்
உபநயம் — இம்மலையும் புகையுடையது
நிகமனம் — ஆதலில் இம்மலை நெருப்புடையது.

16·3 எதிர்மறை அனுமானம்

பிரதிஞ்ஞை — இம்மலை புகையுடையதன்று
ஏது — நெருப்பின்மையால்
திருட்டாந்தம் — யாது யாது நெருப்பில்லாதது
அதுவது புகையில்லாதது
உபநயம் — இம்மலையும் நெருப்பில்லாதது
நிகமனம் — ஆதலில் இம்மலை புகையுடைத்தன்று

16·4

பொருள் உண்மை முதன்மைப்படுத்தப்படுகிறது. ஆதலின் அனுமான விதிகள் என எதுவும் எடுத்துக் காட்டப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org